**தலைப்பு 258 - கண்டி மாவட்ட செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன கண்டி மாவட்ட செயலகத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 258 – கண்டி மாவட்ட செயலகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூலை 30 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கண்டி மாவட்ட செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.3 ஆம் பந்தி முதல் 2.15 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை நிறைவேற்றியிருப்பதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் | | | | |
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 1. | செயல்நடவடிக்கைத் திட்டத்தை சரியாக தயாரிக்காமை | 2.3.1 |
| | | 2. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றாமை | 2.3.2 |
| | | 3. | பெறுகை நடவடிக்கைகள் போதியளவில் திட்டமிடப்படாமை | 2.4.1(அ) (ஆ) |
| | | 4. | பாதீட்டு மதிப்பீடு நடைமுறை ரீதியாக தயாரிக்கப்படாமை | 2.10(அ) |
| 128(1)(இ) | நிதிப்பிரமாணம் மற்றும் அரசாங்கத்தின் ஏனைய துணை அறிவுறுத்தல்கள் தமது திணைக்களத்தில் பின்பற்றப்படுகின்றன என்பதும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன என்பதும் | 1. | குறித்த நோக்கத்திற்காக உப கட்டுநிதிகள் வழங்குதலும் தீர்த்து வைப்பதில் தாமதமும் | 2.12 |
| | | 2. | வைப்புக் கணக்குகளின் குறைபாடுகள் | 2.13 |
| | | 3. | இணக்கமின்மைகள் | 2.14 |

| | | | | |
|---|---|---|---|---|
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசாங்கத்தின் பொறுப்பில் பேணப்படுகின்ற பணம், பொருட்கள், உபகரணம் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பேணிப் பாதுகாப்பதற்காக போதியளவும் முறையானதுமான ஒழுங்குவிதிகள் பயன்படுத்தப்படுதல், அவை காலத்துக்குக் காலம் மெய்மையாய்வு செய்யப்படுகின்றன என்பதுவும் அவை முறைப்படியாக அகற்றப்படுகையில் அவ்வாறு அகற்றப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கும் ஆலோசனைகளுக்கும் இணங்க செய்யப்படுகின்றமை | 1. | பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் | 2.5 |
| 128(1)(ஏ) | நிலுவையாகக் காணப்பட்ட கட்டணங்கள் முதலியவற்றை அறவீடு செய்வதற்கு விசேட ஒழுங்கு விதிகளைப் பயன்படுத்துவதற்கு மற்றும் அந்த நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணம் தொடர்பாக அவற்றினை அறவீடு செய்வதனைத் துரிதப்படுத்துவதற்கு எடுக்கப்படுகின்ற முயற்சிகள் தொடர்பாக ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது ஏனைய தரப்பினர்களால் பணிக்கப்பட்டவாறு தமக்கு அறிக்கையிடுதல் | | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளின் கீழ் நிலுவையாகவிருந்த கடன் மீதிகளை அறவிடுவதற்கு தவறுகின்றமை | 2.11 |
| 128(ஐ) | அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுங்கு, நேர்மை, ஆகிய விடயங்கள் தொடர்பாக முறையாக கவனம் செலுத்தி தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | 1. | பெறுகை நடைமுறைகள் | 2.4.2 |
| | | 2. | முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.6 |
| | | 3. | முகாமைத்துவ பலவீனங்கள் | 2.9 |
| | | 4. | அமைச்சு மற்றும் திணைக்களத்தினால் அவற்றின் நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தும் போதான பற்றாக்குறைகள் | 2.10 |
| 128(1)(ஐ) | உத்தியோகத்தர்களின் / ஊழியர்களின் தாமதம், அலட்சியம், தவறு அல்லது மோசடியின் காரணமாக அரசாங்கத்திற்கு நட்டம் | | நிதி முறைகேட்டு தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் | 2.7 |

ஏற்பட்டுள்ள சந்தர்ப்பங்களின் போது நிதிப்பிரமாணங்கள் 103 இலிருந்து 108 வரையான பிரமாணங்களில் நிர்ணயிக்கப்பட்டுள்ள நடைமுறைகள் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்பற்றப்படுகின்றன என்பதுவும் நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் சம்பந்தமாக பொறுப்பான உத்தியோகத்தர்கள் / ஊழியர்களை அடிப்படையாகக் கொண்டு மிகை அறவீடுகள் விதிக்கப்படுகின்றன என்பதுவுமாகும்.

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பணிகள்

(அ) மாவட்ட நிர்வாகம்
(ஆ) சட்டரீதியான நடவடிக்கைகள்
(இ) உள்ளகக் கட்டுப்பாட்டினை பலப்படுத்தல்
(ஈ) சமய மற்றும் ஒழுக்கம் சார்ந்த அபிவிருத்தி
(உ) ஊழியர் நலன்புரி அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு இணங்க மாவட்டத்தில்
(ஊ) கூட்டிணைப்பு மற்றும் நட்புரீதியான நிர்வாகம்
(எ) அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கிராம எழுச்சி
(ஏ) அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் சமுதாய பங்களிப்பு
(ஐ) ஊடக கூட்டிணைப்பு
(ஒ) நிர்வாக எண்ணக்கருக்களை மேம்படுத்தலும் பயிற்சியளித்தலும்
(ஓ) தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு

### 2.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் அவற்றின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகள்

மாவட்ட செயலகத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்டுள்ள நிறுவனங்களும் செயற்பாடுகளும் கீழே தரப்படுகின்றன.

| | மாவட்ட செயலகத்தின் கீழுள்ள நிறுவனங்கள் | தோற்றுவிக்கப்படுவதற்கான அதிகாரம் | | செயற்பாடுகள் |
|---|---|---|---|---|
| i | உடதும்பர பிரதேச செயலகம் | | 1 | சகல வரிசை அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் சட்டரீதியான ஏற்பாடுகளினுள் சகல செயற் பாடுகளின் கூட்டிணைப்பு மூலம் பொதுமக்கள் நலன்புரி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை அதிகரித்தல். |
| ii | தெல்தோட்டை பிரதேச செயலகம் | | | |
| iii | பஸ்பாக கோரளை பிரதேச செயலகம் | | | |

iv யட்டிநுவர பிரதேச செயலகம்

v உடபலாத்த பிரதேச செயலகம்

vi பாத்தஹேவாஹெட்ட பிரதேச செயலகம்

vii தொழுவ பிரதேச செயலகம்

viii மினிப்பே பிரதேச செயலகம்

ix உடுநுவர பிரதேச செயலகம்

x கங்க இஹல கோறளை பிரதேச செயலகம்

xi குண்டசாலை பிரதேச செயலகம்

xii பாத்ததும்பற பிரதேச செயலகம்

xiii பூஜாப்பிட்டிய பிரதேச செயலகம்

xiv அக்குரண பிரதேச செயலகம்

xv கங்கவட்ட கோறளை பிரதேச செயலகம்

xvi தும்பனே பிரதேச செயலகம்

xvii பன்வில பிரதேச செயலகம்

xviii ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலகம்

xix ஹதரலியத்த பிரதேச செயலகம்

xx மெததும்பற பிரதேச செயலகம்

1992 இன் 58 ஆம் இலக்க பிரதேச செயலகஙகளை தாபிக்கும் அதிகாரச்சட்டம்

2 பிரிவினுள் சகல காணி தொடர்பான நடவடிக்கைகள்

3. வனப் பாதுகாப்பு, வன சீவராசிகள், மதுவரி, மோட்டார் வாகனங்கள், புவிச்சரிதவியல், சுரங்க அகழ்வு, நீர்ப்பாசன, தேர்தல்கள் மற்றும் ஆட்பதிவு திணைக்களம் போன்ற கட்டளைச் சட்டங்களினால் கையளிக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுதல்

4. அதிகாரப் பிரிவினுள் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளை செயற்படுத்துதுல் மற்றும் அனர்த்த முகாமைத்து வத்திற்குரிய செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

5 பதிவாளர் கடமை நடவடிக்கைகள்

6. அரசின் வருமானம் மற்றும் நிதி நடவடிக்கைகள் தொடர்பான கட்டுப்பாடு மற்றும் வழிநடாத்தல்

## 2.3 செயலாற்றல்

-----------------------

### 2.3.1 திட்டமிடல்

-------------------

மாவட்ட செயலகத்தினால் மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டமொன்று காணப்பட்ட போதிலும் ஐக்கிய நாடுகளின் 2030 நிகழ்ச்சிநிரலின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இலக்கிடப்பட்டு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

.

### 2.3.2 செயற்பாடுகளை நிறைவேற்றாமை

------------------------------------------------------------

**செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றாமை**

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் மூலதன நிதிஏற்பாடுகளின் கீழ் 04 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது. அதில் 03

செயற்திட்டங்கள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும் ரூபா 27 மில்லியனான நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த தெல்தோட்டை பிரதேச செயலகத்தின் கட்டிட நிர்மாணம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக ரூபா 21.6 மில்லியன் நிதி ஏற்பாட்டின் பேரில் ஹாரிஸ்பத்துவ, பாத்தஹேவாஹட்ட மற்றும் பூஜாபிட்டிய பிரதேச செயலகங்களின் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிந்தன.

## 2.4 பெறுகை நடைமுறைகளின் மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்ளல்

மாவட்ட செயலகத்தால் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு ரூபா 115.23 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 108.24 மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.4.1 பெறுகைகளைத் திட்டமிடல்

**(அ) பெறுகைகளைத் திட்டமிடலும் தொடக்க படிமுறையும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 வழிகாட்டியின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக மாவட்ட செயலகம் பிரகாரம் தெல்தோட்டை, கங்கவட்ட கோரளை மற்றும் யட்டிநுவர பிரதேச செயலகங்களினால் 2017 ஆம் ஆண்டின் பெறுகை திட்டம் 2017 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே பிரதான பெறுகை திட்டம் 6 மாதங்களுக்கு மேற்படாத காலப்பகுதியில் நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பெறுகை திட்டத்தில் ஒவ்வொரு பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கும் பூர்த்தி செய்வதற்கும் நிர்ணயிக்கப்பட்ட திகதிகள் குறிப்பாக இனங்காணப்படாதிருந்ததுடன் திட்டமிடப்பட்ட உருப்படிகள் மற்றும் பெறுமதியும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஒப்பந்தத்திற்கு முன்னையதான கட்டம்**

(i) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1(ஈ) வழிகாட்டியின் பிரகாரம் மாவட்ட செயலகம் உட்பட பிரதேச செயலகங்களினால் விரிவான பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மாவட்ட செயலகத்தினால் 2017 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படும் உடதும்பற பிரதேச செயலகக் கட்டிட நிர்மாணம் ஒப்பந்தத்திற்காக மதியுரை சேவைகளுக்காக விரிவான பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிவ்லலை.

(iii) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.3 வழிகாட்டியின் பிரகாரம் கட்டம் 1 மற்றும் கட்டம் 2 இன் கீழ் மாவட்ட செயலகத்தினால் செயற்திட்டத்திற்காக விரிவான பெறுகை காலஅட்டவணையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.2 பெறுகை நடைமுறைகளை அமுல்ப்படுத்துதல்

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாவட்ட செயலகம், தெல்தோட்டை மற்றும் கங்கவட்ட கோரளை யட்டிநுவர பிரதேச செயலகங்களின் கேள்வி அழைப்பு விடும் பொது ஒப்பந்தகாரரின்

தன்மையின் பிரகாரம் (கட்டிடங்கள், வீதிகள், நீர்ப்பாசனம்) என்பவற்றுக்குரிய வகைகளை குறிப்பிடாமல் "ICTAD / CIDA நிறுவனங்களின் சீ - அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதியொன்றில் செல்லுபடியான பதிவு காணப்படும் ஒப்பந்தகாரர்களிடமிருந்து மாத்திரம் மாத்திரமென" குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) பஸ்பாகே கோரளை மற்றும் உடபலாத்த பிரதேச செயலகங்களினால் வழங்குனர்களிடமிருந்து விலைகோரல் பெற்றுக்கொள்ளும் போது சாதாரண தபாலில் கடிதங்கள் அனுப்பி விலை பெற்றுக்கொள்வதாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், தபால் பதிவேட்டினைப் பரீட்சித்த போது உரிய வழங்குனருக்கு சாதாரண தபாலில் விலை கோரல் கடிதம் அனுப்பியமை உறுதிப்படுத்தப்படவில்லை.

(இ) தொழுவ பிரதேச செயலக கட்டிட நிர்மாணத்தில் கட்டம் iii, iv, v இற்காக கேள்வி கோரும் போது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் கூறுவிலைகளினதும் கணித ரீதியில் சரியானதல்லாத கூறுவிலைகளாக அவதானிக்கப்பட்டன. மேலும், பிழையற்ற iii மற்றும் iv ஆம் கட்டங்களில் சரிசெய்யப்பட்ட சகல கூறுவிலைகள் முதலாவது சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகளை விட கூடிய பொறியியலாளர் மதிப்பீட்டையும் மிகைத்த பெறுமதியொன்றை எடுத்திருந்தது.

(ஈ) தொழுவ பிரதேச செயலக கட்டிட நிர்மாண ஒப்பந்தம், பொறியியலாளர் மதிப்பீட்டில் நிறைவேற்றுவதற்கு இனங்கப்பட்டு குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், பெறுகை கைநூலின் 7.9.2 (ஆ) 8.11 மற்றும் 8.2.1 வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.4.1 வழிகாட்டியின் பிரகாரமும் பெறுகை வழிகாட்டலின் 3.4(இ) (iii) பந்தியின் பிரகாரமும் பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து கேள்வி கோரும் சந்தர்ப்பங்களில் 02 சந்தர்ப்பங்களுக்கு மேற்பட்ட தடவை கேள்வி சமர்ப்பிக்கப்படாத ஒப்பந்தகாரரின் பதிவு அகற்றப்பட வேண்டியிருந்தன. எனினும் மாவட்ட செயலகம் மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச செயலகம் அந்த ஏற்பாடுகளிலிருந்து விலகி நடவடிக்கை எடுத்திருந்தது.

(ஊ) மாவட்ட செயலகத்தின் கட்டிடங்கள் மற்றும் வீதிகளுக்காக 660 ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்திருந்தனர். மாவட்ட செயலகம் மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச செயலகம் என்பன முறையே 2017 சனவரி முதல் செப்தெம்பர் வரை மற்றும் 2017 சனவரி முதல் திசெம்பர் வரையான காலப்பகுதியில் முறையே 28 ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் 16 பேரிடமிருந்தும் மாத்திரம் கேள்வி கோரியிருந்தது. அதன் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் 16 பெறுகைகள் 08 ஒப்பந்தகாரர்களுக்கு இடையே பகிரப்பட்டிருந்ததால் ஒப்பந்தங்கள் சிறு தரப்பினரிடையே பகிரப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

மாவட்ட செயலகத்தின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

### விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டிலான சொத்துக்கள்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினால் வழங்கப்பட்ட ஆலோசனைகளுக்கு புறம்பாக யட்டிநுவர பிரதேச செயலகத்தில் நடாத்திச் செல்லப்படும் விதாதா வள நிலையத்தின் உணவு தயாரிக்கும் இயந்திரம் விளைவற்ற விதத்தில் அலுவலகத்திற்கு வெளியே களஞ்சியமொன்றில் காணப்பட்டது.

## 2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவையாகும். அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) வர்த்தகமல்லாத செயற்பாடுகளுக்காக மணல், மண், குருணிக்கற்கள் எடுப்பதற்காக வழங்கப்படும் அனுமதிப்பத்திரமொன்றிலிருந்து 2 கியூப்களுக்கு மேற்படாத அளவிலான போக்குவரத்து செய்யக்கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும், தெல்தோட்ட பிரதேச செயலகத்தினால் 07 சந்தர்ப்பங்களில் 02 கியூப்களுக்கு மேற்பட்ட மணல் மற்றும் மண் போக்குவரத்து செய்வதற்காக ஒரு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) உடபலாத்த பிரதேச செயலகத்தின் கெப் வண்டி 2017 மே 25 ஆந் திகதி விபத்திற்குட்பட்டு ரூபா 2.22 மில்லியன் மதிப்பீட்டில் தனியார் நிறுவனமொன்றில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு காப்புறுதி கம்பனியிடமிருந்து 1.89 மில்லியன் மீளளிப்பு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலைமையில் உள்ள வாகனத்திற்காக ரூபா 6.1 மில்லியன் முழுமையாக காப்புறுதி மேவுகையை பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது. மேலும், அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.14.1 வழிகாட்டலின் பிரகாரம் ரூபா 200,000 இனை விஞ்சும் மோட்டார் வாகன திருத்த வேலைகளுக்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. வாகனத்தின் அடிச்சட்டகத்தை திருத்த முடியாதென கண்டி மாவட்ட மோட்டார் வாகன பரிசோதகர் பரிந்துரை வழங்கியிருந்த போதிலும், வாகனத்தை திருத்துவதற்காக ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2018 மே மாதம் வரை விபத்து இடம்பெற்று ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், கெப் வண்டி பிரதேச செயலகத்திற்கு திருத்தியமைத்து மீள வழங்கியிருக்கவில்லை. இது தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(4) இறுதி பரிசோதனை அறிக்கையொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ வாகனம் 2015 யூன் 11 ஆந் திகதி விபத்திற்கு உட்பட்டிருந்தது. அதன் திருத்த வேலைகளுக்கான மதிப்பீடு ரூபா 3.4 மில்லியனாக இருந்தது. இத்திருத்தங்களுக்காக காப்புறுதி கம்பனியிடமிருந்து ரூபா 2.97 மில்லியன் தொகை கிடைத்திருந்தது. மேலும் திருத்த வேலைகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 430,166 நிலுவை தொகைக்கு உரிய கம்பனியிடமிருந்து வேண்டுகோளொன்று இல்லாமல் விலை சாதகம் கிடைத்திருந்தது. மேலும் விபத்து தொடர்பாக முறையான பரிசோதனையொன்று மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தீர்மானிக்கப்படாதிருந்ததுடன் திருத்த வேலைகள் அமைச்சின் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை.

## 2.7 நிதி மோசடி தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

தொழுவ பிரதேச செயலகத்தின் புதிய கட்டிடத்தின் நிர்மாணம் நான்கு கட்டங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில் நான்காவது கட்டத்தின் விடய இலக்க 7-1 இன் கீழ் நிலத்தின் மீது நிலக்கல் பிடித்தலுக்காக ரூபா 1.6 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2017 ஒக்தோபர் 17 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் போது முதலாவது வகையான நிலக்கல்லுக்குப் பதிலாக தரத்தில் குறைந்த இரண்டாம் தர (2nd Quality) நிலக்கல் பிடிக்கப்பட்டு ரூபா 91,423 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், v ஆம் கட்டத்தின் 2.3, 6.5, 8.1 மற்றும் 10.1 ஆம் இலக்க வேலை விடயங்கள் நிறைவேற்றப்படாதிருக்கையில் அதற்காக ரூபா 320,000 தொகை V கட்டத்தின் 3.2 ஆம் விடயத்தின் கீழ் R.R MASONARY WORK இற்காக நிறைவேற்றப்பட்டிருந்த வேலையை விட 3.64 m3 இற்காக ரூபா 50,960 தொகையும் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. உடன்படிக்கையின பிரகாரம் 2016 திசெம்பர் 30 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய iv ஆம் கட்டம் 2017 ஒக்தோபர் 17 ஆந்

திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதன்படி தாமதமான நாட்களுக்காக ரூபா 435,120 ஆன தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.8 தீர்வு செய்யப்படாத கணக்காய்வு பந்திகள்

2008 ஆம் ஆண்டில் வாகன விபத்தினால் ஏற்பட்ட ரூபா 360,435 ஆன நட்டம் தொடர்பாக கங்க இஹல கோரளை பிரதேச செயலாளர் பொறுப்புக்கூற வேண்டியுள்ளதால் அந்நிலுவை அறவிடுவதற்கு 2016 பெப்ரவரி 23 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுக் கணக்குகள் குழுவின் 02 ஆம் கட்டளையின் மூலம் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் ரூபா 360,435 ஆன நட்டம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.9 முகாமைத்துவ பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 03 பிரதேச செயலகங்களில் 11 சந்தர்ப்பங்களின் போது காணி கையேற்பின் போது 5 ஆண்டுகள் முதல் 45 ஆண்டுகள் வரையான காலதாமதமொன்று காணப்பட்ட காரணத்தினால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஓய்வுபெற்ற ஒருவர் மரணித்தவுடன் கிராம சேவையாளரால் இறப்பு தொடர்பாக பிரதேச செயலகத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும். எனினும், 02 பிரதேச செயலகங்களால் 2 சந்தர்ப்பங்களின் போது 05 மாதங்கள் மற்றும் 15 மாத காலதாமதத்தின் பின்னர் ஓய்வுபெற்றவர்களின் இறப்பு தொடர்பாக பிரதேச செயலகங்களுக்கு அறிக்கையிடப்பட்டிருந்தன.

(இ) 2011 யூன் 14 ஆந் திகதிய 2/2011 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் பிரகாரம் செலுத்தாத சம்பளம், ஒரு மாதம் கடந்ததன் பின்னர் ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்ப வேண்டியிருந்தது. எனினும், 04 பிரதேச செயலகங்கள் 34 சந்தர்ப்பங்களில் 1 மாதம் முதல் 22 மாதங்கள் வரையான காலதாமதத்தின் பின்னர் ரூபா 1.2 மில்லியனான கொடுப்பனவு செய்யப்படாத ஓய்வூதியத்தை ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) 5 பிரதேச செயலகங்களுக்குரிய 11 உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டதன் பின்னர் மோட்டார் சைக்கிள்களுக்கு உரித்தற்ற வேறு பதவிகளுக்கு மாற்றம் பெற்று சென்றிருந்தனர். 2017 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய பீடீ/1/1/11/1/(உப) 2017 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் அவர்களிடமிருந்து மோட்டார் சைக்கிள்களின் சந்தைப் பெறுமதியான ரூபா 975,920 தொகை மீள அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.10 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்புக்கள் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2013** | மீண்டுவருபவை | 922.39 | 922.39 | - | - |
| | மூலதனம் | 121.65 | 99.25 | 22.40 | 18.41 |
| | மொத்தம் | 1044.04 | 1021.64 | 22.40 | 2.15 |
| **2014** | மீண்டுவருபவை | 823.47 | 820.38 | 3.09 | 0.37 |
| | மூலதனம் | 103.10 | 103.00 | 0.10 | 0.10 |
| | மொத்தம் | 926.57 | 923.38 | 3.19 | 0.34 |
| **2015** | மீண்டுவருபவை | 1066.98 | 1066.79 | 0.19 | 0.02 |
| | மூலதனம் | 81.00 | 77.97 | 3.03 | 3.74 |
| | மொத்தம் | 1147.98 | 1144.76 | 3.22 | 0.28 |
| **2016** | மீண்டுவருபவை | 1132.00 | 1118.42 | 13.58 | 1.20 |
| | மூலதனம் | 99.00 | 98.32 | 0.68 | 0.69 |
| | மொத்தம் | 1231.00 | 1216.74 | 14.26 | 1.16 |
| **2017** | மீண்டுவருபவை | 1159.15 | 1103.51 | 55.64 | 4.80 |
| | மூலதனம் | 114.00 | 106.92 | 7.08 | 6.21 |
| | மொத்தம் | 1273.15 | 1210.43 | 62.72 | 4.93 |

மீளாய்வாண்டு தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.10.1 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு உத்தேச காலகட்டம் தொடர்பில் கருத்திற் கொள்ளாமல் நிதிஏற்பாடு மேற்கொள்ளல்

மாவட்ட செயலகத்தினால் கட்டிடம் மற்றும் நிர்மாண செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக மொத்தக் கிரய மதிப்பீட்டின் பிரகாரம் தேவையான மொத்த நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரை சாத்தியவள ஆய்வொன்றும் பெறுகை செயற்பாட்டிற்கு உரிய செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் மொத்த நிதிஏற்பாட்டினையும் பயன்படுத்த முடியாமையால் மொத்த நிதிஏற்பாட்டிலிருந்து 7 மில்லியன் அதாவது 8 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

### 2.10.2 ஏனைய அமைச்சுக்களாலும் திணைக்களங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களினால் வழங்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தல்

ஏனைய 30 அமைச்சுக்களாலும் 17 திணைக்களங்களாலும் பல்வேறு செயற்பாடுகளுக்காக ரூபா 3,334.09 மில்லியன், ரூபா 466.25 மில்லியன் மற்றும் ரூபா 3,800.34 என மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 3,669.86 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டுமிருந்தது. அதன் பிரகாரம் வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளில் ரூபா 130.48 மில்லியன் அதாவது 3.43 சதவீதமான சேமிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டின் வெவ்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்களின் கீழ் ரூபா 4,124.88 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், ஆண்டில்

அந்தந்த அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்தும் எவ்வித எழுத்துமூல வேண்டுகோளொன்றும் இல்லாமல் ரூபா 324.54 மில்லியன் மீள கையளிக்கப்பட்டிருந்தது. அில் 119.99 மில்லியன் மூலதன நிதிஏற்பாடு கையளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டின் போது e-NIC நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துவதற்காக ஆட்பதிவு திணைக்களத்தால் குண்டசாலை மற்றும் அக்குரனை பிரதேச செயலகங்களுக்கு எழுதுகருவி இருப்பொன்றும் கணனி மற்றும் கணனி உபபாகங்களும் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், ஆட்பதிவுத் திணைக்களத்தால் அதனை செயற்படுத்த நடவடிக்கை எடுக்காமையால் வழங்கப்பட்டிருந்த உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டதுடன் எழுதுகருவிகள் சேதமடைந்து இருந்தன.

(இ) கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 196,534 நிதிஏற்பாடுகளிலிருந்தும் பிரதேச வாசிகளிடமிருந்தும் ரூபா 130,000 நிதி பங்களிப்பின் பேரில் கங்கவிட்ட கோரளை பிரதேச செயலகத்தினால் வெலிகிரிய சனசமூக மண்டபம், ஹுபுதலே கடுள்ள மற்றும் வெலிகிரிய கிராமத்திற்கு செல்லும் பாலம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்தின் மூலம் 4 வீடுகளில் வாழும் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட தரப்பினருக்காக நலன்கள் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. நிர்மாணிக்கப்பட்ட பாலத்திற்கு அருகில் மற்றுமொரு பாலம் இருக்கையில் இப்பாலம் நிர்மாணத்தின் ஊடாக பிரதேசத்தின் முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய ஏனைய அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு பணத்தை ஈடுபடுத்துவதற்கு இருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2016 ஆம் ஆண்டின் போது கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் மாகாண சபை உறுப்பினர் மானியங்களின் கீழ் முறையே ரூபா 317,181 மற்றும் ரூபா 38,127 என மொத்தம் ரூபா 355,308 செலவிடப்பட்டு குண்டசாலை பிரதேச செயலகத்தினால் பிரதான வீதியின் கோவிலுக்கு அருகில் இருந்து சாந்தி மாவத்தை 172 ஆம் இலக்க வீடு வரையான வடிகாண் முறைமையை அமைக்கும் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது காணிகள் உட்பகுதி மற்றும் ஓரக்காண் தொடர்புபடும் சுவர் கழுவிச் செல்லப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மண் வெட்டுவதற்காக ஒரு கன மீற்றருக்கு ரூபா 900 வீதம் 9.14 m3 இற்காக ரூபா 7,533 உம் 1 ஆம் கட்டத்தின் 03 ஆம் உருப்படியின் கீழும் 11 ஆம் கட்டத்தின் 02 ஆம் உருப்படியின் கீழும் 1.2.4 (3/4”) கலவை மூலம் கொங்கிரீட் இடும் போது இருக்க வேண்டிய மதிப்பிடப்பட்ட தரத்தில் அல்லாமல் உயரம், அகலம் மற்றும் தடிப்பு காணப்பட்ட காரணத்தினால் ரூபா 31,720 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்தால் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மேவுகை செய்யப்படக் கூடிய வகையில் சிறுவர் சங்கங்கள் தாபிக்கப்பட்டு பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், 5 பிரதேச செயலகங்களின் 285 கிராம சேவையாளர் பிரிவுகளின் 122 பிரிவுகளில் மாத்திரம் சிறுவர் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

(ஊ) 31 ஆவது கால்வாய் கட்டிவத்த மற்றும் கஹேவத்த (இறப்பர் தோட்டம்) இரண்டு கிராமங்களை இணைக்கும் பாலம் நிர்மாணம் மாகாண திட்டமான மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மினிபே பிரதேச செயலகத்தினால் செயற்படுத்தப்பட்டிருந்தது. இடம்பெற்ற தவறு காரணமாக பாலம் உடைந்து விழுந்த காரணத்தினால் பரிசோதனை திகதியான 2017 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும் செயற்திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(எ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதிஏற்பாட்டின் கீழ் மினிபே பிரதேச செயலகம் மூலம் வரகொல்ல குருலுபொத்த யானை வேலி நிர்மாண செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பரீட்சித்த போது யானை வேலி முதல்

ஒரு பகுதிக்கு 10 கனமீற்றர் வீதம் காடுகள் துப்பரவு செய்யப்பட வேண்டிய போதிலும் 05 மீற்றர் அளவில் இரண்டு பக்கமும் காடுகள் துப்பரவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அதற்காக ரூபா 529,931 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதிஏற்பாட்டின் கீழ் மினிபே பிரதேச செயலகத்தின் மூலம் செயற்படுத்தப்பட்டிருந்த யானை வேலி நிர்மாணத்திற்காக மத்திய அளவிலான 7 ஆவது கால்வாய் மின்வேலியை அமைக்கும் செயற்திட்டத்தில் காடுகளை துப்பரவாக்குவதற்காக 10 மீற்றருக்காக ரூபா 412,510 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது யானை வேலியிலிருந்து ஒரு வரிக்கு 10 மீற்றருக்குப் பதிலாக 05 மீற்றர் மாத்திரம் காடுகள் சுத்திகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு ஏக்கருக்கு ரூபா 22,560 வீதம் 9.14 ஏக்கர் அளவிற்காக ரூபா 206,251 தொகையும் காடுகள் சுத்திகரிக்கப்படாத 9.14 ஏக்கர் அளவிற்காக இயந்திரங்களை பயன்படுத்தி காடுகளை அகற்றுவதற்காக ஏக்கர் ஒன்றுக்கு ரூபா 18,714 வீதம் ரூபா 171,946 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. யானை வேலி நிர்மாணிக்கப்பட்டதன் பின்னரும் வேலி உடைக்கப்பட்டு மீண்டும் யானைகள் கிராமத்திற்குள் வருவதன் காரணமாக செயற்திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஐ) அனர்த்த முகாமைத்துவ அமைச்சு ரூபா 3.8 மில்லியன் நிதிஏற்பாட்டின் அடிப்படையில் தெநுவர கிரிப்பீட தர்ம நிறுவனம் அமைந்துள்ள காணிக்கு கீழான அதிக பள்ளமான பகுதியுடன் கூடிய பகுதியொன்றின் 4.7 மீற்றர் உயரமான மதில் ஒன்றை நிர்மாணித்து மண்சரிவு ஆபத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மலைக்கு மேல் கட்டியாகாத மண்ணை நிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை மற்றும் அடிப்பகுதியில் சிறிய மதிலொன்றை மாத்திரம் நிர்மாணிப்பதற்காக நடவடிக்கை எடுத்த காரணத்தினால் செயற்திட்டம் வெற்றியளிக்கவில்லை.

(ஒ) 2016 ஆம் ஆண்டில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிதிஏற்பாட்டின் பேரில் நாவலப்பிட்டி நகரில் வெள்ள நிலைமையை குறைக்கும் செயற்திட்டத்தின் கீழ் பழைய வடிகாண் முறைமையொன்று இருக்கையில் புதிதாக வடிகாண் முறைமையொன்றை அமைப்பதற்காக ரூபா 20 மில்லியன் நிதிஏற்பாட்டின் பேரில் 02 கட்டங்களாக II மற்றும் III என மதிப்பீடு தயாரிக்கப்பட்டு II ஆம் கட்டத்திற்காக மட்டுப்படுத்தப்பட்ட கூறுவிலை கோரப்பட்டு ரூபா 6.30 மில்லியனுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு ரூபா 10.78 செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. முறையான சாத்தியவள ஆய்வொன்று மேற்பார்வையும் காலநிலைமையொன்றையும் கவனத்திற் கொள்ளாமல் பலவீனமான திட்டமொன்றும் மதிப்பீடொன்றும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. செயற்திட்டத்தினால் அமைக்கப்பட்ட காணின் வாயிலில் நீர் வழியும் கதவு சிறிதாக இருந்த காரணத்தினால் நீர் வழி நேரடியாக வடிகாண் முறையுடன் தொடர்புபடுத்தப்பட்டிருக்கவில்லை. வெள்ளத்தைக் கட்டுப்படுத்த முடியாமை காரணமாக மழை காலங்களில் வீதி மற்றும் சுற்றுப்புற பிரதேசம் நீரால் மூழ்குவதை தவிர்க்க முடியாமல் இருந்தது. இதன் காரணமாக செயற்திட்டத்திற்காக அரசாங்கம் செலவழித்த ரூபா 10.78 மில்லியன் பயனற்ற செலவினமாக இருந்தது. அவ்வாறே இச்செயற்திட்டத்தை நிறைவேற்றும் போது விகாரையொன்றின் கட்டிடமொன்றை அப்புறப்படுத்துவது மற்றும் ஏனைய கட்டிடங்களுக்கு சேதங்கள் ஏற்பட்ட காரணத்தினால் ரூபா 1.47 மில்லியன் செலவில் புதிய கட்டிடமொன்று நிர்மாணிக்க நேர்ந்தது. மேலும் ஒப்பந்த பெறுமதிக்கு மேலதிகமாக ரூபா 2.81 மில்லியனான மேலதிக செலவினமொன்று அரசிற்கு செலவிட நேர்ந்தது. வடிகாண் 7 மீற்றர் நீளமான உரு பகுதிக்கு கொங்கிரீட்டிற்குப் பதிலாக ஹியும் குழாய் இடப்பட்டிருந்தால் அரசின் நிதியை சேமிக்க கூடியதாக இருந்திருக்கும் என்பது அவதானிக்கப்பட்டது.

(ஓ) குருதெனியா பகுதியில் வெள்ளத்தை குறைப்பதற்காக கண்டி மாவட்ட அனர்த்த குறைப்பு செயற்திட்டத்தின் கீழ் ரூபா 520,198 கங்கவட்ட கோரளை செயலக்தினால் 05 குடும்பங்களை அனர்த்த நிலைமையிலிருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இச்செயற்திட்டம் காரணமாக மேலும் இரண்டு குடும்பங்களுக்கு மழை நீரால் அனர்த்தம் ஏற்படக் கூடுமென அவதானிக்கப்பட்டதால் செயற்திட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்ற முடியாமல் இருந்தது. மேலும் இச்செயற்திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்படும் வடிகாணின் நியம உயரம் 1'.9'' மற்றும் ஓரச் சுவரின் தடிப்பு 4'' ஆக இருக்க வேண்டும். 2017 நவம்பர் 20 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது அதன் உயரம் 1.7'', 1.6'', 1.9'' என்ற வகையிலும் தடிப்பு 3.5'' 3.4'' எனக் காணப்பட்டன. அதன் பிரகாரம் கொங்கிரீட்டிற்காக ரூபா 10,889 தொகையும் சுற்றில்லாத கொங்கிரீட்டை உடைத்து அகற்றுவதற்காக ரூபா 41,034 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஔ) கண்டி மாவட்டத்தின் அகுரணை நகரின் வெள்ள அனர்த்தத்தை குறைக்கும் செயற்திட்டத்திற்காக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் ரூபா 32.50 மில்லியன் கண்டி மாவட்ட செயலகத்தின் அனர்த்த முகாமைத்துவ பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 26.21 மில்லியனான பெறுகை தொடர்பாக கேள்வி ஆவணங்களில் முழுமையான தகவல்கள் வெளிப்படையாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் தகைமை பூர்த்தி செய்யப்பட வேண்டி குறைந்த தர தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யாதிருந்த ஒப்பந்தகாரருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது.

(ii) 4..3.1 வழிகாட்டலுக்கு இணங்கும் வகையில் மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 5.3.10 வழிகாட்டலுக்கு புறம்பாக போதியளவு காலமொன்று மேவுகை செய்யப்படாத கேள்வி பிணைப் பொறுப்பொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

(iv) 5.4.11 மற்றும் 5.4.12 வழிகாட்டலின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக வரி மாதிரிப் பட்டியலொன்று பெற்றுக்கொள்ளப்படாமல் ஒப்பந்தகாரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் பெறுமதி அடிப்படையிலான வரி விபரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிக்கையிடாமை காரணமாக ஒப்பந்தக்காரரால் உரிய கொடுப்பனவுகளின் போது ரூபா 281,205 ஆன வரித் தொகையொன்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(v) 8.10.1 இன் பிரகாரம் வழங்கப்பட்ட ஒப்பந்தம் தொடர்பாக பகிரங்கப்படுத்துவது தொடர்பான செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(vi) பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக எவ்வித கேள்வி கோரலொன்றும் இல்லாமல் சாத்தியவள ஆய்வு அறிக்கைகள் தயாரிப்பதற்காக ரூபா 495,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(vii) வண்டல் மண்ணை வெட்டி அகற்றுவதற்காகவும் போக்குவரத்து செய்வதற்குமான வேலை விடயங்களுக்காக மதிப்பிடப்பட்ட தொகையை விட கேள்விதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட விலை விபரங்கள் அசாதாரண விதத்தில் குறைவாக இருந்தமை, கேள்விதாரர் ஒருவருக்கு ஒருவர் இந்த இரண்டு வேலை விடயங்களிற்காக சமர்ப்பித்த விலை விபரங்களில் மிகவும் அசாதாரண வேறுபாடுகள் காணப்பட்டதை இனங்காணப்பட்டிருக்கவில்லை. விலை விபரங்கள் தொழில்நுட்ப அடிப்படையில் பகுப்பாய்வு செய்து மதிப்பாய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன்பிரகாரம் அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.6 வழிகாட்டலில் குறிப்பிடப்பட்ட பொறுப்பு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**II உரிய சட்டங்களில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து விலகி செயற்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.**

---

(i) 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் பிரகாரம் ஒப்பந்த பதிவாளரின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்க மற்றும் கணிப்பொருட்கள் மற்றும் அதற்குரிய திருத்தங்களிலிருந்து விலகி 17,116 கியூப் மண்/ வண்டல் மண் தோண்டப்பட்டு போக்குவரத்து செய்யப்பட்டிருந்தது.

**III மதிப்பீட்டு தயாரிப்பதில் பலவீனம்**

---

செயற்திட்டத்தினால் மொத்த மதிப்பீட்டிலிருந்து 80 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மண் வெட்டுதல் மற்றும் போக்குவரத்து செய்யும் 2 வேலை விடயங்களுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட விகிதங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 16.58 மிலலியனுக்கு அண்மித்த அளவில் அசாதாரணமாக மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

**IV கணக்காய்விற்காக சான்றுகள் காணப்படாமை**

---

வண்டல் மண் / மண் போக்குவரத்து செய்யப்பட்ட டிபர் வண்டிகளின் நீளம், அகலம், உயரம் அளவிடப்பட்டு அது தொடர்பான அறிக்கையொன்று கோவைகளில் காணப்படாமை, வேலை பரிசோதகர்களின் அளவீட்டு அறிக்கை காலரீதியில் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களால் பரீட்சித்து சான்றுறுதிப்படுத்தியதாக ஆவணங்கள் காணப்படாமை, வண்டல் மண் மண் இறக்கும் இடமொன்று தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ நிலைய மற்றும் பொறியியல் பிரிவின் எந்தவொரு உத்தியோகத்தராலும் அறிந்திராமை உட்பட காரணங்களின் பேரில் வண்டல் மண் வெட்டி அகற்றுதல் மற்றும் போக்குவரத்து செய்யப்படும் கியுப்களின் அளவின் தன்மை சரியான தன்மையை சரியானதென கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**V முகாமைத்துவ பலவீனங்கள்**

---

கீழே காட்டப்பட்டுள்ள முகாமைத்துவ பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ரூபா 26.21 மில்லியன் மதிப்பிடப்பட்ட பெறுமதியுடைய ஒப்பந்தம் ஒப்பந்தகாரரொருவருக்கு உடன்படிக்கையின் பிரகாரம் 2015 நவம்பர் 14 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2016 பெப்ரவரி 29 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

உடன்படிக்கையின் பிரகாரம் ஒரு நாளைக்கு ரூபா 4,700 வீதம் தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒடுங்கிய இடங்களில் உள்ள அத்துமீறிய நிர்மாணங்கள் அகற்றப்பட்டு ஒடுங்கிய இடங்களை அகலமாக்கல் செயற்பாடு முழுமையாக நிறைவேற்றப்படாமை, 1.25 மீற்றர் ஆழமாக்கியமை மற்றும் 25,000 கனமீற்றர் முதல் 30,000 கனமீற்றர் வரை வண்டல் மண் போதியளவில் அகற்றப்படாமை மற்றும் பொருத்தமான இடங்களில் மண் தடுப்பு சுவர் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும், அம்மண்ணை அகற்றும் செயற்பாடொன்று 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை செயற்படுத்தாமை காரணமாக இச்செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் போதியளவில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## VI கூடுதலான கொடுப்பனவு செய்தல்

பின்வரும் அவதானிப்புக்கள மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மண் / வண்டல் மண் வெட்டுதல், போக்குவரத்து செய்து அகற்றும் இரண்டு வேலை விடயங்களுக்காக ஏற்றுக்கொண்ட விலைகளின் பிரகாரம் கூறுவிலைகளுக்கு கூடிய விலையில் மதிப்பீடு செய்த காரணத்தினால் கணக்காய்விற்கு கணக்கிடக்கூடிய தகவல்களின் பிரகாரம் ரூபா 15.57 மில்லியன் தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) போலியான டிபர் வண்டியொன்றில் மண் / வண்டல் மண் எனக்குறிப்பிட்டு கொடுப்பனவு செய்தமை மற்றும் டிபர் வண்டிகளின் தளத்தை நியம இயலளவை விட போலியான இயலளவை குறிப்பிட்டு நான்கு டிபர் வண்டிகளுக்காக ரூபா 2.62 மில்லியன் ஒப்பந்தகாரருக்கு கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

(iii) ரூபா 6.74 மில்லியனான பெறுகையின், உடன்படிக்கை பெறுமதி ரூபா 4.85 மில்லியனாக இருந்தது. இந்த ஒப்பந்தகாரரின் பிரகாரம் 3,000 கனமீற்றர் வண்டல் மண் அகற்றப்பட்டு போக்குவரத்து செய்வதற்காக உடன்படிக்கையின் கடப்பாடாக இருந்த போதிலும் 4,416.76 கனமீற்றர் அதாவது 1,416.76 கனமீற்றருக்காக கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அது உடன்படிக்கை செய்யப்பட்ட தொகைகளில் 34 சதவீத மிகையாகும்.

(ஔ) கடலதெனியா விஹாரையின் 4 அறைகளுடன் (Cabin) கூடிய மலசலகூட முறைமையொன்றை நிர்மாணிப்பதற்காக சுற்றுலா மற்றும் கிறிஸ்தவ மத விவகார அமைச்சு நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. செயலாற்றல் பிணை பெற்றுக் கொள்ளாமல் ஒப்பந்தகாரரொருவருக்கு ரூபா 2.42 மில்லியனுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. மலசலகூட முறைமைகளின் அத்திவாரம் மாத்திரம் இடப்பட்டதன் பின்னர் ஒப்பந்தகாரரால் நிர்மாண நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தன. அரசின் கேள்வி வழிகாட்டல் கோவையின் 8.11 வழிகாட்டலின் பிரகாரம் ஒப்பந்தம் தவிர்ப்புச் செய்த ஒப்பந்தகாரர்களுக்கு ஒப்பந்தம் கையளிக்க கூடாத போதிலும் உடுநுவர பிரதேச செயலாளரால் மேற்படி ஒப்பந்தக்காரருடன் மீண்டும் 2017 ஒக்தோபர் 30 ஆந் திகதி ரூபா 2.65 மில்லியனுக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 22 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது இம்மலசலகூடத்தின் திண்ணை மற்றும் நிலத்திற்கு இடப்பட்ட கொங்கிரீட் கலவை திருப்தியற்றதாக அவதானிக்கப்பட்டது.

(க) கங்கவட்ட கோரளை பிரதேச செயலகத்தினால் காணி பயன்பாட்டுக் கொள்கை திட்டத் திணைக்களத்தின் நிதி ஏற்பாடுகளின் கீழ் 2017 ஒக்தோபர் 25 ஆந் திகதி ரூபா 193,000 தொகை செலவு செய்து நித்தவெல பதஹின் சேற்றுமண் அகற்றும் வேலை இடம்பெற்றிருந்தது. நீர் வளத்தைப் பாதுகாத்தல் மற்றும் அந்நீரை விவசாயத்திற்கு பயன்படுத்துவது இச்செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கமாக இருந்த போதிலும், மேலிருந்து வரும் நீருடன் கழிவுப்பொருட்கள் மற்றும் சேற்றுமண் பஹதவிற்குள் வைப்பாக தரிப்பதை தவிர்ப்பதற்கு திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. பௌதீக பரிசோதனையின் போது 2 மாதங்கள் போன்ற குறுங்காலத்தினுள் 207.52m3 அளவிலான மண் தரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. இச்செயற்திட்டம் செயற்படுத்தப்படாமையால் பஹதவினுள் சேற்று மண் மற்றும் கழிவுப்பொருள் தரித்திருப்பதால் நீரேந்து பிரதேசங்கள் அழிவடையக்கூடிய அவதானிக்கப்பட்டது.

## 2.11 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்

மாவட்ட செயலகத்திற்குரிய 258011 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 75.00 | 74.51 | 60.00 | 65.14 | 250.00 | 205.52 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### நிலுவையாக இருந்த கடன் மீதிகளை அறவீடு செய்யாமை

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் சேவையை விட்டுச்சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 849,482 ஆக இருந்ததுடன் அந் நிலுவைக் கடன் மீதிகள் 01 இலிருந்து 14 ஆண்டுகள் வரையான காலவீச்சில் காணப்பட்டது.

## 2.12 கட்டுநிதிக் கணக்கு

2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(5) இன் பிரகாரம் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட குறித்த செயற்பாட்டிற்கான உப கட்டுநிதி தீர்த்துவைக்கப்படுதல் வேண்டும். எனினும் 44 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 785,012 கூட்டுத்தொகையான குறித்த செயல்நிமித்த கட்டுநிதி ½ மாதத்திலிருந்து 6 மாதங்கள் வரையான காலப்பகுதி தாமதித்து தீர்த்து வைக்கப்பட்டிருந்தது.

### 2.13 பொது வைப்புக் கணக்குகள்

மாவட்ட செயலகத்தின் கீழுள்ள 06 பொது வைப்புக் கணக்குகளின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டு மொத்தம் ரூபா 293.81 மில்லியனாகும். அதில் 07 பிரதேச செயலகங்களுக்குரிய 2 ஆண்டுகளை விஞ்சிய காணி வைப்புக்கள் தவிர ரூபா 1.42 மில்லியன் கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.14 இணக்கமின்மைகள்

#### 2.14.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை<br>xvi ஆம் அத்தியாயம் | |
| (i) 3.1 ஆம் பிரிவு | உடபலாத்த பிரதேச செயலகத்தின் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு 04 சந்தர்ப்பங்களின் போது தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக குடும்பத்தின் கீழ் எடுக்கப்படாத அங்கத்தவர் களுக்காகவும் புகையிரத ஆணைச்சீட்டு வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) 1.3.4 ஆம் பிரிவு | தங்கியிருப்போர் தொடர்பாக போதியளவு உறுதிப்படுத்தலொன்று இல்லாமல் உடபலாத்த பிரதேச செயலகத்தினால் 3 சந்தர்ப்பங்களின் போது உத்தியோகத்தர்களுக்காக புகையிரத ஆணைச்சீட்டு வழங்கப்பட்டிருந்தது. |

#### 2.14.2 ஒப்பந்தங்கள் தொடர்பான வரி அறவீடு

அரசின் கேள்வி வழிகாட்டல் கோவையின் 5.4.11 வழிகாட்டலின் பிரகாரம் பெறுமதிசேர் வரிக்காக பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு இன்வொய்ஸ் பத்திரமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் செய்யப்பட்ட வேலை அடிப்படையில் பெறுமதி சேர் வரிசெலுத்தப்பட வேண்டிய போதிலும் தொலுவ பிரதேச செயலக கட்டிட நிர்மாணத்தின் iii, iv மற்றும் v இற்காக கொடுப்பனவு செய்யும் போது ஒப்பந்தக்காரரிடமிருந்து பட்டியல் பெற்றுக்கொள்ளாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 2.15 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவு**

மேலே 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுகின்றன. மீளாய்வாண்டிற்காக மாவட்ட செயலகத்தால் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 994 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு நபருக்கான செலவினம் ரூபா 292,167 ஆக இருந்தது.

| | ஆளணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 111 | 87 | 24 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 59 | 32 | 27 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 3454 | 3104 | 350 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 228 | 178 | 50 |
| | மொத்தம் | 3852 | 3401 | 451 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மினிபே பிரதேச செயலகத்தில் 04 ஆண்டு காலமாக இருந்து வரும் 09 ஊழியர் வெற்றிடங்கள் உட்பட மீளாய்வாண்டின் இறுதி வரை காணப்பட்ட 451 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிறுவகம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.